பக்கங்கள் 18+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 26 வெள்ளிக்கிழமை 12.12.2025 | அதிர்வு 135

## ஆபத்தான நிலை நீடிப்பதால் தேவையற்ற பயணங்களை மக்கள் தவிர்க்க வேண்டும்!

### சிரேஷ்ட புவியியலாளர் அறிவுறுத்தல்

இலங்கையில் நிலவும் கடுமையான காலநிலை காரணமாக ஆபத்தான நிலை நீடிப்பதால், பொதுமக்கள் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக யாழில் பெரும் போராட்டம்

## 4 தரப்புகளிடம் மகஜர்களும் கையளிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள்இந்தியமீனவர்களின்அத்துமீறலைக் கட்டுப்படுத்தக் கோரி யாழ்ப்பாணத்தில் இன்று பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பண்ணைப் பகுதியில் உள்ள கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அலுவலகத்தின் முன்னால் இன்று காலை ஒன்றுகூடிய யாழ். மாவட்ட மீனவர்கள், இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராகக் கோஷமிட்டவாறு அங்கிருந்து பேரணியாக மாவட்ட செயலகம் வரை சென்றடைந்தனர். 03

## சபுகஸ்கந்த விபத்தில் சிக்கிய முன்னாள் சபாநாயகர் கைது!



முன்னாள் சபாநாயகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அசோக ரன்வல கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற விபத்து சம்பவம் தொடர்பிலேயே அவர் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சபுகஸ்கந்த – தெனிமல்ல பிரதேசத்தில் நேற்று இரவு அசோக ரன்வல பயணித்த ஜீப் வாகனம் விபத்துக்குள்ளாகியிருந்தது.

அவரின் ஜீப் வாகனம் வீதியில் பயணித்த கார் ஒன்றுடன் மோதியதில் விபத்து சம்பவித்திருந்தது.

இந்த விபத்தில் காரில் பயணித்த ஒரு பெண்ணும் ஒரு குழந்தையும் சிறு காயங்களுடன் சிகிச்சை 02

## பேரிடர் மரணம் 640 ஆக உயர்வு!

### 211 பேரைக் காணோம்



இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தப் பேரழிவுகளால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 640 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் 211 பேர் காணாமல்போயுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் இன்று நண்பகல் 02

# இலங்கையில் மண்சரிவு அபாயம்: 2,377 இடங்களில் ஆய்வு ஆரம்பம்

## தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த தகவல்

இலங்கையில் மண்சரிவு ஏற்படக் கூடிய நிலையில் அடையாளம் காணப் பட்டுள்ள 2 ஆயிரத்து 377 இடங்க ளில் ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறு வனம் அறிவித்துள்ளது.

இந்த இடங்கள் தொடர்பாக 529 இறுதி அறிக்கைகள் ஏற்கனவே வெளி யிடப்பட்டுள்ளன என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவி யியலாளர் வசந்த சேனாதீர தெரிவித் துள்ளார்.

மண்சரிவு ஏற்படக்கூடிய நிலையில் அடையாளம் காணப்பட்ட இடங்களை



ஆய்வு செய்ய ஏழு மாவட்டங்களில் மொத்தம் 56 ஆராய்ச்சி குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தால் ஏற்பட்ட மண்சரிவுகள் மற்றும் வெள்ளம் ஆகியவற்றால் நாடு முழுவதும் 1,322 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர குறிப்பிட்டுள்ளார்.

செயற்கைக்கோள்களைப் படங்க ளைப் பயன்படுத்தி அண்மையில் ஏற் பட்ட மண்சரிவு இடங்களை அடையாளம் காணும் திட்டத்தையும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் ஆரம்பித்துள் ளது.

# திருமலையில் வீதியோரத்தில் இருந்து குடும்பப் பெண் ஒருவர் சடலமாக மீட்பு!

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலையில்குடும்பப்பெண் ஒருவர் இன்று சடலமாக மீட்கப்பட் டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

திருகோணமலை, சலப்பையாறு பகுதியில் வீதியோரத்தில் இருந்து மேற் படி பெண்ணின் சடலம் மீட்கப்பட் டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் குச்சவெளி – சலப்பையாறு பகுதி யைச் சேர்ந்த விஜயகுமாரி செல்வராஜா எனும் 56 வயதுடையவர் எனத் தெரிய வந்துள்ளது.

இந்தப் பெண் அயல் வீட்டுக்குச் சென்று வராதையடுத்து அவரைக் கண வர் தேடிச் சென்றபோது குளிர் காரண மாக அவர் போத்திச் சென்ற போர்வை வீதியோரத்தில் இருந்தது. சற்று தூரத் தில் அவர் வீசி எறியப்பட்ட நிலையில் சடலமாகக் காணப்பட்டார். அந்த இடத்தில் தடயப்பொருட்களாகக் கண் ணாடித் துண்டுகள் காணப்பட்டன.

மேற்படி பெண் விபத்தில் உயிரிழந் துள்ளார் என்றும், விபத்துச் சம்பவம் இடம்பெற்றதையடுத்து விபத்தை ஏற்படுத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ள னர் என்றும் ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

எனினும், விபத்து தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் குச்சவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தேவையற்ற...**

பயணங்கள் மற்றும் சுற்றுலாக் களைத் தவிர்க்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவி யியலாளர் வசந்த சேனாதீர எச்ச ரித்துள்ளார்.

கண்டி, கேகாலை, மாத்தளை, குரு நாகல் ஆகிய நான்கு மாவட்டங்க ளில் உள்ள 33 பிரதேச செயலக பிரிவுகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாயத்துக்கான சிவப்பு அறிவிப்புகள் மேலும் நீடிக்கப்பட்டுள்ளன என்றும் ஊடகங்களிடம் அவர் குறிப்பிட்டுள் ளார்.

“தற்போதைய அனர்த்த சூழ்நிலை யில், மக்கள் செய்யக்கூடிய மிகச் சிறந்த காரியம் தேவையற்ற பயணங்களைத் தவிர்த்து, பாதுகாப்பான இடங்களில் தங்கியிருப்பதாகும்” – என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

ஆபத்துகள் இருந்தபோதிலும், வார இறுதிச் சுற்றுலாக்களுக்குச் செல்வது சாத்தியமா என்று பொதுமக்கள் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அழைத்து விசாரித்த பல அழைப்புகள் கிடைத்துள்ளன என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

**சபுகஸ்கந்த...**

பெற்று வருகின்றனர்.

இதேவேளை, இந்த விபத்தில் அசோக ரன்வல எம்.பியும் காயமடைந்திருந் தார்.

இன்று கைது செய்யப்பட்டுள்ள அவர், தற்போது கொழும்பு தேசிய வைத் தியசாலையில் பொலிஸ் பாதுகாப் பின் கீழ் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**பேரிடர் மரணம்...**

வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்களின் விளைவாக, 5 ஆயிரத்து 713 வீடுகள் முழுமையாக வும், ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 805 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந் துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களைத் தங்க வைப்பதற்காக நாடு முழுவதும் 847 பாது காப்பு மையங்கள் தற்போது இயங்கு கின்றன.

இந்த மையங்களில் மொத்தமாக 26 ஆயிரத்து 103 குடும்பங்களைச் சேர்ந்த 82 ஆயிரத்து 813 பேர் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இந்திய மீனவர்கள்..**

இதன்போது யாழ். மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அத்தோடு இந்தியத் துணைத் தூதரம், வடக்கு மாகாண ஆளுநர், கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் ஆகியவற்றிலும் போராட்டக்காரர்களால மகஜர் கையளிக்கப்பட்டது.

























# ஜனாதிபதி அநுரவுக்கு எதிராக குற்றப் பிரேரணை வேண்டும்!

## சஜித் அணியிடம் மஹிந்த அணி கோரிக்கை

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எதிராகக் குற்றப் பிரேரணையொன்றைக் கொண்டு வருமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிடம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“பேரிடர் குறித்து முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு தகவல் கிடைத்தும் அனர்த்தங்களால் ஏற்பட்ட இழப்புகளை கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளது. இது விடயத்தில் தனது இயலாமை மற்றும் கவனயீனத்தை மூடி மறைப்பதற்கு அரசு முயற்சித்து வருகின்றது.

அத்துடன், அரசபலத்தைப்பயன்படுத்தி தமது தரப்பில் இழைக்கப்பட்ட தவறை மறைப்பதற்குரிய நடவடிக்கையும் முன்னெடுக்கப்படுகின்றது.

எனவே, ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றப் பிரேரணையொன்றை முன்வைக்குமாறு பிரதான எதிர்க்கட்சியிடம் கோருகின்றோம். அவ்வாறு கொண்டு வந்தால் எங்கு தவறிழைக்கப்பட்டது என்பது உட்பட அனைத்து தகவல்களும் தெரியவரும்.

தேசிய மக்கள் சக்தியில் மனச்சாட்சியின் பிரகாரம் செயற்படும் எம்.பிக்களும் அதனை ஆதரிக்கக்கூடும். அப்போது அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலமும் ஆட்டம் காணும்.” - என்றார்.

# இலங்கையில் அவசரகாலச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படவில்லை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சுட்டிக்காட்டு

இலங்கையில் பேரிடரையடுத்து அமுலுக்கு வந்த அவசரகாலச் சட்டம் தவறான நோக்கில் பயன்படுத்தப்படவில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

”பேரிடர் நிலைமையை எதிர்கொள்ளவே அது அமுல்படுத்தப்பட்டது. மாறாக அரசியல் நோக்கங்களுக்காக சட்டம் பயன்படுத்தப்படவில்லை.” - என்றும் ஊடகங்களிடம் அவர் கூறியுள்ளார்.

எனினும், அவசரகாலச் சட்டம் ஒடுக்குமுறை ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றது என எதிரணி குற்றஞ்சாட்டி வருகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நாடாளுமன்றத்தில் அண்மையில் ஆற்றிய உரையின்போது இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்திருந்தார்.



அதேவேளை, அவசரகாலச் சட்டத்தின் கீழ் தங்கள் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக எவரேனும் கருதினால் அது தொடர்பில் முறைப்பாடு செய்யலாம் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அவசரகால விதிமுறைகள் அரசமைப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீற முடியாது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமால் புஞ்சிஹேவ சுட்டிக்காட்டியுள்ளார்.

1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் கீழ், இது போன்ற எந்தவொரு முறைப்பாட்டையும் விசாரிக்க ஆணைக்குழு கடமைப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையில் பேரிடரால் ஏற்பட்ட இழப்பு: டிசம்பர் 20 இற்குள் மதிப்பீட்டு அறிக்கை!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தகவல்



"இலங்கையில் டித்வா புயலால் ஏற்பட்ட பேரிடரால் நிகழ்ந்த இழப்புகள் தொடர்பான ஆரம்பக்கட்ட மதிப்பீடுகளை எதிர்வரும் 20 ஆம் திகதிக்குள் வெளியிடக்கூடியதாக இருக்கும்."

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ நம்பிக்கை வெளியிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது பேரிடரால் ஏற்பட்ட இழப்புகள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என அமைச்சரிடம் வினவப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர் கூறியவை வருமாறு:-

"சில நிறுவனங்களால் உத்தேச இழப்பீடு விவரம் வெளியிடப்பட்டுள்ளது. எனினும், முழுமையான விவரங்களே மிக முக்கியம். இதற்காகச் சில இடங்களில் உலக வங்கியின் உதவிகள் கோரப்பட்டுள்ளன.

அந்தவகையில் டிசம்பர் 15 முதல் 20 ஆம் திகதிக்குள் இழப்பு பற்றிய மதிப்பீட்டை வெளியிட முடியும் என நம்புகின்றோம்." – என்றார்.

# அநுரவின் ஆட்சியில் ஊழலுக்கு இடமில்லை; அதனால்தான் சர்வதேச உதவிகள் தாராளம்

## ஜே.வி.பியின் செயலாளர் விளக்கம்



"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் ஊழல், மோசடி இடம்பெறாது என சர்வதேச சமூகம் நம்புகின்றது. அதனால்தான் சர்வதேச உதவிகள் அதிகளவு கிடைக்கப் பெறுகின்றன."

– இவ்வாறு ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"இலங்கை அரசு மீது சர்வதேசம் நம்பிக்கை வைத்துள்ளது. இந்த ஆட்சியின் கீழ் ஊழல், மோசடிகள் இடம்பெறாது என்பதாலேயே அதிகளவு சர்வதேச உதவிகள் கிடைக்கப் பெறுகின்றன.

இந்த ஆட்சியின் கீழ் சர்வதேச உதவிகள் கிடைக்கப்பெறமாட்டாது எனச் சிலர் கூறி வந்தாலும் அது பொய் என்பது உறுதியாகியுள்ளது.

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களும் உதவிகளை வழங்கி வருகின்றனர். நாட்டு மக்களும் தம்மால் முடிந்த பங்களிப்பைச் செய்துள்ளனர். இவர்களுக்கு நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கு அரசு உதவிகளை வழங்கும்.

மக்களுக்கு அரசால் வழங்கப்பட்ட அனைத்து நிவாரண உறுதிமொழிகளும் நிச்சயம் நிறைவேற்றப்படும்." – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரோபோ சங்கர் பாணி அரசு

தமிழ் சினிமாப் பட நகைச்சுவை ஒன்றில் நடிகர் ரோபோ சங்கருக்கு வந்த பழக்கதோஷ வியாதி போல ஒரு பிணி இந்த அரசுக்கும் வந்து விட்டது போல.

அண்மையில் மறைந்த நடிகர் ரோபோ சங்கரை தமிழ் ரசிகர்கள் நன்கு அறிவர். அவரது நகைச்சுவை நடிப்பை மறந்து இருக்க மாட்டார்கள். 'வேலைன்னு வந்துட்டா வெள்ளைக்காரன்' என்ற படத்தில் அவர் ஓர் எம்.எல்.ஏ. அவர் எந்த விடயத்தைப் பேசிக் கொண்டிருக்கும் போதும் இடையில் குறுக்கிட்டால் மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தொடங்கிப் பேசும் ஒரு பழக்கம் அந்தப் படத்தில் அவருக்கு.

"அன்னிக்குக் காலையில ஆறு மணி இருக்கும். கோழி கொக்கரக்கோன்னு கூவிச்சுது... என் பொண்டாட்டி குளிச்சிட்டு, தலை நிறையப் பூ வச்சிட்டு என்ன வந்து உசுப்பினா...." - என்று தொடங்கி திரும்பத் திரும்ப ஆரம்பத்திலிருந்து வசனங்களைப் பேசி மக்களை நகைச்சுவையில் ஆழ்த்திய ரோபோ சங்கர் போல இந்த அரசு நடந்து கொள்கின்றது.

தேசிய மக்கள் சக்தி எதிரணியில் இருந்த காலத்தில் எல்லாம் நிலுவையில் இருக்கும் மாகாண சபை தேர்தலை விரைந்து நடத்தும்படி ஒற்றைக் காலில் நின்று வலியுறுத்தி வந்தது. தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அடுத்த ஒரு வருடத்திற்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்தி முடிப்போம் என்று தேர்தல் வாக்குறுதி கொடுத்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது.

ஆனால், இப்போது தேர்தலுக்கான கள நிலைவரம் தங்களுக்கு வசதியாக - சாதகமாக இல்லை என்றதும் - மாகாண சபை தேர்தல் விடயத்தை ரோபோ சங்கர் எம்.எல்.ஏயாக நடித்த போது நடந்து கொண்ட மாதிரி மாகாண சபை தேர்தலுக்கான விவகாரத்தை ஆரம்பத்தில் இருந்து மீண்டும் தொடங்கி காலத்தை இழுத்தடிக்கத் தீர்மானித்து விட்டது என்பது தெளிவாகி இருக்கிறது.

மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்துவது என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான நாடாளுமன்ற விசேட தெரிவுக் குழுவொன்றை நியமிப்பதற்கான யோசனை விரைவில் நிறைவேற்றப் படவுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் காலத்தை இழுத்தடித்து மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் செய்யும் அரசின் 'ரோபோ சங்கர் பாணி' தந்திரத்தை அம்பலப்படுத்தியிருக்கின்றது.

விசேட தெரிவுக் குழுவொன்றை நியமிப்பதற்கான யோசனை சபை முதல்வர் பிமல் ரத்நாயக்கவால் சமர்ப்பிக்கப்பட்டு, நாடாளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கலப்பு தேர்தல் முறைமை, வாக்களிக்கும் உரிமை மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் வாக்களிப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துதல் உள்ளிட்ட தேர்தல் முறைமையொன்றை உருவாக்குவதற்கு விரிவான விவாதங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்படியானால் இந்த அரசின் ஆட்சிக் காலத்தில் மாகாண சபைத் தேர்தலே நடக்கப் போவதில்லை என்பதுதான் நிலைமை.

# நல்லூர் பிரதேச சபையின் பாதீடு 16 வாக்குகளால் வெற்றி!

(எஸ். நிதர்ஷன்)

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் மயூரனால் இன்று சமர்ப்பிக்கப்பட்ட நல்லூர் பிரதேச சபையின் 2026ஆம் ஆண்டுக்கான பாதீடு 16 வாக்குகளால் வெற்றிபெற்றது.

பாதீடுக்கு ஆதரமாக 16 வாக்குகளும் எதிராக 4 வாக்குகளும் கிடைக்கப்பெற்றது. ஆதரவாகத் தமிழ் மக்கள் கூட்டணி 6 வாக்குகளையும் தமிழரசுக் கட்சி 7 வாக்குகளையும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி 3 வாக்குகளையும் வழங்கின.

எதிர்த்து தேசிய மக்கள் சக்தி 3 வாக்குகளையும் ஈழமக்கள் ஜனநாயக் கட்சி 1 வாக்கையும் பதிவு செய்தன.

# பிரதேச மக்களின் அடிப்படைத் தேவைகளை இயலுமானவரை பூர்த்தி செய்யும் பாதீடு!

## நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் மயூரன் பாதீட்டு உரையில் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

பிரதேசத்தில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளை இயலுமானவரை பூர்த்தி செய்யும் வகையில் நல்லூர் பிரதேச சபையின் பாதீடு அமைக்கப்பட்டுள்ளது என்று நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் மயூரன் பாதீட்டு உரையில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நல்லூர் பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீட்டை சபையின் அங்கீகாரத்துக்காக நான் சமர்ப்பிக்கின்றேன். ஒரு பாதீடானது வருமான மூலங்களை அதிகரித்து அந்த வருமான மூலங்களில் இருந்து கிடைக்கும் வருமானங்களைமிகைப்படுத்தப்பட்டநிர்வாகச்செலவுகளுக்கும் ஆடம்பரச் செலவுகளுக்கும் பயன்படுத்தாமல் மக்களின் நலநோன்புக்கு மட்டும் முன்னுரிமை வழங்கி பயன்படுத்த வேண்டும். பொதுவாக உள்ளூராட்சி மன்றங்கள் ஒரு அரச நிர்வாக அலகாக இருந்தாலும் அது மக்கள் மயப்படுத்தப்பட்ட மக்களின் நலநோன்புக்காகப் பணிபுரியும் ஒரு மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறுவனம். அதை மனதில் நிறுத்தியே இந்தப் பாதீடு அமையப்பெற்றுள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு என்றுமில்லாதவாறு பல சவால்கைளையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்ட போதும் அதையும் தாண்டி நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தின் உட்காட்டுமான மேம்பாடுக்காகவும் அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளையும் இயலுமானவரை பூர்த்தி செய்யும் வகையில் இந்தப் பாதீடு அமைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் 2026 ஆம் ஆண்டு சபைக்கு கிடைக்கும் என்று எதிர்பாக்கப்படும் மொத்த வருமானமானது 450. 537மில்லியன்ரூபாவாகக்காணப்படுகின்றது. அதில் 363.648 மில்லியன் ரூபா சபையின் சுயவருமானம். 2025 ஆம் ஆண்டுசபையின்சுயவருமானம்268.99 மில்லியன் ரூபாவாகும்.

2026 ஆம் ஆண்டு சபையின் சுய வருமானத்தில் அதிக பங்களிப்புச் செய்கின்ற வாடகைகள் மற்றும் உரிமையாக்கல் கட்டணங்கள் அதிகரித்துள்ளமை



யால் 2026 ஆம் ஆண்டுக்கான சபையின் சுயவருமானம் 369.648 மில்லியன் ரூபாவாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் 2025 ஆம் ஆண்டு பாதீட்டில் சபையின் சுயவருமானம் 268.99 மில்லியன் ரூபாவாகவும் அதில் 93.2 வீதமாகிய 250.833 மில்லியன் ரூபா 3 ஆவது காலாண்டிலேயே சபைக்கு வருமானமாக கிடைத்துள்ள நிலையிலும் 2026 ஆம் ஆண்டு வாடகைகள் மற்றும் உரிமையாக்கல் கட்டணங்கள் மூலம் அதிக வருமானம் சபைக்கு கிடைக்கும் என்பதாலும் 2026 ஆண்டுக்கான சபையின் சுயவருமானம் என எதிர்பாக்கப்படும் 369.648 மில்லியன் ரூபா சாத்தியமானதாகும்.

2026 ஆம் ஆண்டுக்கான சபையின் பாதீட்டில் மொத்த செலவீனமாக 450.535 மில்லியன் ரூபா காணப்படுகின்றது

கடந்த காலங்களில் எமது சபையில் பணிபுரியும் அனைத்து நிரந்தப் பணியாளர்களுக்குமான கொடுப்பனவை மத்திய அரசு அரசிறை வருமானமாக முழுமையாக வழங்கி வந்த நிலையில் இவ்வாண்டு முதல் இந்தப் பணியாளர்களுக்கான மொத்தக் கொடுப்பனவில் 40 வீதத்தை நாம் செலுத்த வேண்டும் என்ற அரச சுற்றிக்கையின் பிரகாரம் 2025 ஆம் ஆண்டு சபைக்கு கிடைத்த 117.79 மில்லியன் ரூபா அரசிறை மானியம் 2026 ஆம் ஆண்டு 86.77 மில்லியன் ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில் பணிபுரிகின்ற நிரந்தரப் பணியாளர்களின் கொடுப்பனவு மற்றும் அவர்களுக்கு அரசாங்கத்தினால் உயர்த்தப்பட்ட சம்பள அதிகரிப்பு உட்பட அந்த பணியாளர்களுக்கு வழங்கவேண்டிய மொத்த கொடுப்பனவுத் தொகையின் 40 வீதம் நல்லூர் பிரதேச சபையின் சுயவருமானத்தில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஒதுக்கீடு எமது மக்களுக்கு சென்றடையக் கூடிய மக்கள் நலன் சார்ந்த ஒதுக்கீடுகளில் கணிசமான செல்வாக்கு செலுத்துகின்ற போதிலும் மக்களின் நலநோன்புக்கு முன்னுரிமை வழங்கியே இப் பாதீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வீதிகளைப் புனரமைத்தல், வடிகாலமைப்பு, வீதி மின்விளக்குகள், நகர அபிவிருத்தி, மயானங்களைப் புனரமைத்தல், வீதிகளுக்கு பெயர்பலகையிடுதல், விளையாட்டு மைதானம் அமைத்தல் என நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியின் உட்கட்டுமான மற்றும் அபிவிருத்தி மேம்பாட்டுக்கு 162 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது சபையின் சுய வருமானத்தின் 44.55 வீதமாகும். அதே போல் நல்லூர் பிரதேசசபைக் குட்பட்ட மக்களின் வாழ்வியல் மேம்பாட்டுச்செயற்றிட்டங்களானசத்துணவுவழங்குதல் புலமை பரிசில் நன்கொடை, விசேட தேவையுள்ளோர் நல நோன்பு, தாய் சேய் பராமரிப்பு, வாழ்வாதார உதவி என்பவற்றுக்காக 12 மில்லியன் ரூபாவும் முன்பள்ளி அபிவிருத்தி மற்றும் சனசமூக நிலைய நன்கொடை ஆகியவற்றுக்கு 3.4 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையில் காணப்படும் 12 வட்டாரங்களின் அபிவிருத்திக்கும் 10 மில்லியன் ரூபா வீதம் 120 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் அந்தந்த வட்டார உறுப்பினர்களால் வழங்கப்படும் செயற்றிட்டங்களில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் குறித்த வட்டார அபிவிருத்தி நிதியிலிருந்து அந்த வட்டாரத்தில் மேற்கொள்ளப்படும்.

நல்லூர் பிரதேச சபை எதிர்கொள்ளும் மிகமுக்கிய பிரச்சினையாகிய திண்மகழிவு முகாமைத்துவத்தை 2026 ஆம் ஆண்டு முதல் மிக வினைதிறனாகச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. கழிவகற்றல் பொறி

தொடர்ச்சி▼

# பிரதேச மக்களின் அடிப்படைத் தேவைகளை இயலுமானவரை பூர்த்தி செய்யும் பாதீடு!

தொடர்ச்சி▲

முறை யை வினைத்திறனான மாற்றும் வகையில் கழிவுப் பொருள்கள் மீள் சுழற்சி மையங்கள் மேம்படுத்தப்பட்டு அவற்றுக்கு தேவையான மீள்சுழற்சி இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்றவகையில் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல், மர நடுகை செய்தல், போதை பொருள் ஒழிப்பு போன்ற செயற்றிட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் அனர்த்த முகாமைத்துவம் ஆகியவற்றுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நெருக்கடிகளையும் சவால்களையும் கண்டு தன்னுடைய இலக்கை மாற்றிக் கொள்பவன் இந்த உலகில் எதையும் அடைவதில்லை. அதே போல் நல்லூர் பிரதேச சபையும் தனக்கு முன்னால் எழும் எல்லா நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொண்டபோதும் தன்னுடைய இலக்காகிய மக்கள் நலனே முதன்மையானது, அதை நோக்கிச் செயற்படுவோம் என்ற தாரக மந்திரத்தைத் தன்னகத்தே கொண்டு 2026 ஆம் பாதீடு தயாரித்துள்ளது. அந்த பாதீட்டை உறுப்பினர்களின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கிறேன்.

இந்தச் சபையில் இருக்கும் உறுப்பினர்கள் வெவ்வேறு கட்சிகளைப் பிரநிதித்துவப்படுத்துகின்றனர். அவர்களுடைய கட்சிகளின் கொள்கைகள் இலக்குகள் வேறானவையானதாக இருக்கலாம். ஆனால் நீங்கள் அனைவரும் சந்திக்கும் ஒற்றுமைப்படுகின்ற ஒரு புள்ளி மக்கள் நலன்.

மக்கள் மனங்களில் ஏற்பட்ட நம்பிக்கையால் மக்களால் வாக்களிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இந்தச் சபையும் நம்பிக்கை கொண்ட மக்களை ஏமாற்றாத வகையில் மக்கள் நலன் சார்ந்து தனது கன்னிப் பாதீட்டை உருவாக்கியுள்ளது.

மேலே கூறிய தரவுகளின் அடிப்படையில் சபையின் சுயவருமானமாகிய 363.648 மில்லியன் ரூபாவில் ஏறத்தாழ 181.36 மில்லியன் ரூபா மக்கள் நலன் சார்ந்த செயற்றிட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது சபையின் சுயவருமானத்தின் 49.88 சதவீதமாகும். இதன் படி பல சவால்களுக்கு மத்தியில் சபையின் சுயவருமானத்தில் அரைப் பங்கு நேரடியாக மக்களுக்கு சென்றடையும் வகையில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ள இந்தப் பாதீடானது மக்கள் எம் மீது கொண்ட நம்பிக்கையைச் சிதறடிக்காத வகையில் உருவாக்கப்பட்டுள்ளதால் இது அதன் குறிக்கோளில் வெற்றியடைந்து விட்டது.

ஆனால் அந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தச் சபையில் இருக்கும் உறுப்பினர்கள் இப் பாதீடு தொடர்பில் என்ன தீர்மானம் எடுக்க போகின்றார்கள் என்பதே இங்குள்ள வினா.

அந்த வகையில் மக்கள் நலனுக்கு முன்னுரிமை வழங்கி தயாரிக்கப்பட்டுள்ள நல்லூர் பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான இந்தப் பாதீட்டைச் சபையின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கிறேன்.- என்றார்.

# மன்னார் பெரியமடு ஆலயத்துக்கு சந்நிதியான் ஆச்சிரமம் நிதி உதவி

மன்னார் - பெரியமடு, காயாநகர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு ஆழ்துளையிடும் கிணறு அமைப்பதற்கு ஒரு லட்சத்துப் 10 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

இந்த உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினார்.





# சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவினரின் ஏற்பட்டில் விழிப்புணர்வு நிகழ்வு










**(எஸ்.எஸ்.அமிர்தகழியான், மட்டக்களப்பு)**

சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவினரால் விழிப்புணர்வுகள் சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவின் முகாமையாளர் ரசிக்க குணவர்த்தன தலைமையில் சர்வோதயா மண்டபத்தலில் நேற்று இடம் பெற்றன.

கொழும்பை தலைமையமாக கொண்ட சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவினர் ”கைதிகளின் உரிமைகளைப் பாதுகாத்து மனித பெருமையினை உயர்த்துவோம்” எனும் தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் செயற்றிட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவினர் கைதிகளின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான சட்ட ரீதியான உதவிகளை பத்து வருடங்களுக்கு மேலாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவின் பணிப்பாளர் சுதேஸ் நந்திமாசில்வா, திட்ட அதிகாரி தி. ஷாமினி, ஊடக இணைப்பாளர் கலும்விஜேசிங்க எனப் பலர் கலந்து கொண்டனர்.







# அதிகரித்து வரும் எலிக்காய்ச்சல் ஒரு தீவிர சமூகப் பிரச்சினை!

**பவதாரணி குலேந்திரநாதன்,**
**ஊடகக்கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

இன்றைய சூழலில் நகரங்கள் மற்றும் கிராமப் பகுதிகளிலும்கூட எலிக்காய்ச்சல் என்பது அதிகரித்து வரும், கவலைக்கிடமான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. சுத்தமின்மையும், மக்கள் தொகை நெரிசலும், கழிவு மேலாண்மையின் குறைபாடுகளும், இந்தக் காச்சலைத் தூண்டிவருகின்றன. எலிகள் மூலம் அதிகம் பரவும் நோய்கள் மற்றும் உடைமைச் சேதங்கள் ஆகியவை மனிதர்களுக்கு நேரடியாக பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

எலி காய்ச்சல் எவ்வாறு பரவுகின்றது?

எலிக்காச்சல் நோயானது லெப்ரோஸ்பைறா (Leptospira) என்னும் பக்ரீரியாவால் ஏற்படுகின்றது. குறிப்பிட்ட விலங்குகளின் அதாவது எலி, நாய், பன்றி, பசு, குதிரை போன்றவற்றின் சிறுநீரில் காணப்படும் இந்த பக்ரீரியாவுடன் மக்கள் தொடுகையுறும் போது கண்கள், மூக்கு, காது மற்றும் தோளில் உள்ள வெட்டுக்காயங்களின் ஊடாக பக்றீரியா அவர்களின் உடலினுள் சென்று நோயை ஏற்படுத்துகின்றது.

**எலிக்காய்ச்சல் ஏற்பட முக்கிய காரணங்கள்**

1. மாறி வரும் வாழ்க்கைமுறை: நவீன வாழ்க்கையில் தூய்மை குறைவாகக் காணப்படுவதால், எலிகள் வாழத்தக்க சூழல் ஏற்படுகிறது.

2. கழிவு மேலாண்மை குறைபாடு: வீடுகள், ஹோட்டல்கள், சந்தைகள் போன்ற இடங்களில் கழிவுகள் சரியாக அகற்றப்படாமல் இருப்பது.

3. நகரமயமாக்கல்: கட்டடங்கள், கட்டுமான பணிகள், நிலம் அத்துமீறல்கள் என்பவை எலிகளின் பழைய அடிவேர் தங்கும் இடங்களை பாதிப்பதால், அவை வெளியில் வெளிப்படுகின்றன.

4. சுற்றுச்சூழல் பாதிப்பு: நீர் நிலைகள் மற்றும் நிலநடுக்கத்தால் உருவாகும் மாற்றங்களால், எலிகள் பாதுகாப்பான இடங்களை விட்டு நகர பகுதிகளுக்குள் நுழைவது போன்றவற்றால் எலிக் காய்ச்சல் நோய் பரவக்கூடிய ஆபத்து நிலையானது ஏற்படுகிறது.வயல் வேலைகளில் வேலை செய்யும் விவசாயிகள், சேற்று நிலங்களில் பயிர்செய்கையில் ஈடுபடுபவர்கள்,சுத்திகரிப்பு தொழிலாளர்கள் போன்றோருக்கு அதிகமாக ஏற்படுவதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**எலிக்காய்ச்சலில் இருந்து பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகள்**

1. சுத்தம் பராமரிப்பு: வீடுகளும் சுற்றுப்புறங்களும் எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும். உணவுப்பொருள்கள் திறந்தவையாக வைக்கக்கூடாது.

2. கழிவு மேலாண்மை: சீராக குப்பைகளை அகற்றும் மற்றும் முறையாக அகற்றும் நடைமுறைகள் தேவை.

3. எலிக்கொல்லி பயன்படுத்தல்: தேவையான இடங்களில் எலிக்கொல்லிகள், வலைகள், போன்றவை பயன்படுத்தலாம்.

4. இணைப்பு வெளிச்சங்கள் மற்றும் காற்றோட்டங்களை மூடல்: எலிகள் உட்புகும் வாய்ப்புள்ள துளைகள், பிளவுகள் மூடப்பட வேண்டும்.

5. சுகாதார விழிப்புணர்வு: பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகாம்கள், நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும்.

6. வயல் காணிகளை துப்பரவாக வைத்திருத்தல்: அதாவது வயல் காணிகளுக்கு அருகில் சுத்தம் இல்லாமல் காணப்படின் அவற்றை சுத்தம் செய்தல்.

7. அரச துறைகளின் ஒத்துழைப்பு: மாநகர சபைகள், சுகாதார துறைகள் அடிக்கடி ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவை போன்ற நடவடிக்கைகள் மூலம் எலிக்காச்சலைக் கட்டுப்படுத்த முடியும்.

எலிக்காச்சல் என்பது சிறிய விஷயமாக தோன்றினாலும், அதன் விளைவுகள் மிகவும் தீவிரமானதாக இருக்கக் கூடும். இது மனிதர் உடல்நலம், வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றை நேரடியாக பாதிக்கின்றது. எனவே, சுத்தம், சீரான கழிவு முகாமைத்துவம், மக்கள் விழிப்புணர்வு ஆகியவை இந்தச் சமூகப் பிரச்சினையை கட்டுப்படுத்த முக்கியமான வழிகளாகின்றன. அரசு மற்றும் பொது மக்கள் இருவரும் இணைந்து செயல்படும்போது மட்டுமே, எலிக்காச்சலை தடுக்கும் ஒரு நிலையான தீர்வு கிடைக்கக்கூடும். வாழ்வியல் மாற்றமும், விழிப்புணர்வும் தான் இதற்கான தீர்வுகளாக அமையும்.



# பேரிடர் முகாமைத்துவம் மலையகத்தில் எவ்வாறு நகர்கிறது?

## மனித அபிவிருத்தி தாபனத்தின் தலைமை இணைப்பாளர் ஸ்ரீகாந்த் விளக்குகிறார்

**வி.ரி.சகாதேவராஜா**
**( காரைதீவு நிருபர் )**

வரலாற்றில் என்றுமில்லாதவாறு மலையகம் பேரிடரால் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. இவ்வேளையில் மலையகத்தில் பேரிடர் முகாமைத்துவம் எவ்வாறு நகர்கிறது என்பது தொடர்பாக இலங்கையில் புகழ் பூத்த அரச சார்பற்ற நிறுவனமான மனித அபிவிருத்தி தாபனத்தின் தலைமை இணைப்பாளர் பொன்னையா ஸ்ரீகாந்த் விளக்கியுள்ளார்.

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாரிய ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது மலையகத்தில் இருந்து பணிப்பாளரும் பெருந்தோட்ட பிரதி அமைச்சரின் பிரத்தியேக செயலாளருமான கலாநிதி பிபி.சிவப்பிரகாசம் தலைமையிலான குழுவினர் ஓடோடி வந்து வடக்கு - கிழக்கில் பலதரப்பட்ட அளப்பரிய சேவைகளைச் செய்தனர்.

காரைதீவில் பிரதான அலுவலகத்தை நிறுவி பிராந்தியம் எங்கும் இரவு பகலாக சேவை செய்தனர். அப்போது அதன் வடக்கு கிழக்கு மாகாண பிரதான இணைப்பாளராக அருஞ்சேவையாற்றியவர் பொன்னையா சிறிகாந்த் என்ற இளைஞர்.

சுமார் பத்து வருட காலம் மக்களோடு மக்களாக பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்தவர்கள். குறிப்பாக காரை தீவிலே 165 தற்காலிக கொட்டில்கள், 35 நிரந்தர வீடுகள், பாதிக்கப்பட்ட பாடசாலைகள் வைத்தியசாலை இயங்குவதற்கு தற்காலிக கொட்டில்கள் முன்பள்ளி பாடசாலைகளை அமைத்துக நிருவகித்து உபரணங்கள் மற்றும் போதிய உலர் உணவுப் பொருள்களைக் கட்டம் கட்டமாக நேர்த்தியாகச் செய்து வந்தார்கள்.



புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள் இனமத பேதம் இன்றி பாரிய அளவில் மூன்று வலயங்களில் பரிசுகள் வழங்கி தங்கப் பதக்கம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

சிறுவர் மகளிர் மீனவர் விவசாயிகள் என துறைசார்ந்த அமைப்புக்களை ஏற்படுத்தி உரிமைகளையும் சேவைகளையும் பெற்றுக் கொடுத்தனர். மனித உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வந்தனர். மலையகத்தில் செம்பனை போராட்டம் வெற்றி அளித்தது. இதற்காக மகளிரணித்தலைவி திருமதி எஸ். லோகேஸ்வரி முன்னின்று உழைத்தார். வேள்வி என்கின்ற மகளிர் உரிமை முன்னணியை ஆரம்பித்தார். அது இன்று வரை இயங்கி வருகிறது.

இவ்வாறான பாரிய நிறுவனத்தின் செயற்பாடுகளை வடக்கு கிழக்கில் அன்று முன்னெடுத்த இணைப்பாளர் பொன்னையா ஸ்ரீகாந்த் இன்று மலையகம் தொடர்பாக விளக்குகையில்,

இலங்கையில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலையானது தற்போது நேரடியாகவும், மறைமுகமாகவும் மக்களை நிர்கதியாக்கியுள்ளது. அரச, அரச சாரா நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், நலன் விரும்பிகள் மற்றும் வெளிநாட்டு அரசுகளும் பல்வேறு விதமாக இலங்கையின் நிலைமையை வழமைக்கு கொண்டுவர அயராது உழைத்து வருகின்றனர்.

மனித அபிவிருத்தி தாபனம் (HDO) இந்த அனர்த்தத்தின் தனது சேவைகளை 03 கட்டங்களாக கண்டி, நுவரெலியா, மாத்தளை, கேகாலை, மொனராகலை மாவட்டங்களில் திட்டமிட்டு செயற்படுத்த ஆரம்பித்துள்ளது.

முதலாவது மீட்பு நடவடிக்கைகள், இரண்டாவது நிவாரணமும் தற்காலிக

தொடர்ச்சி▼

# பேரிடர் முகாமைத்துவம் மலையகத்தில் எவ்வாறு நகர்கிறது?



தொடர்ச்சி▲

வதிவிடங்களுக்கு ஏற்பாடு செய்தல் மற்றும் மூன்றாவது நிரந்தரமான தீர்வுக்காக மீள்கட்டுமான அமைப்பை உருவாக்குதல் என்பனவாகும்.

### மீட்பு நடவடிக்கைகள்

மனித அபிவிருத்தி தாபனம் (Hdo) அனர்த்தம் இடம்பெற்ற நாள் தொடக்கம் தாபனத்தின் கிராமமட்ட குழுக்கள், இளைஞர் குழுக்கள் மற்றும் சிறுவர் குழுக்கள் என்பவற்றின் வேண்டுகோளுக்கு இணங்க அரசின் மீட்பு குழுக்களுக்கு மிக கடினமான மலைப் பிரதேசங்களில் மக்கள் சிக்குண்டு உள்ளதை அறியப்படுத்தியுள்ளது. அதேபோன்று அவதானமான பிரதேசத்தில் உள்ள மக்களை அனர்த்த முகாம்களுக்கு சென்று பாதுகாப்பாக இருக்கும்படி அறிவுறுத்தல்களை மக்களுக்கு வழங்கியுள்ளது.

அனர்த்தத்தால் புதையுண்ட, சேதமடைந்துள்ள மீதியுள்ள உடைமைகளைப் பாதுகாப்பதற்காக அவ்வப் பகுதியிலுள்ள குழுக்கள் தகவல்களை பரிமாற்றிக்கொண்டு உடமைகளை மீட்பதற்கு மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் கிராம மட்டக் குழுக்கள், கிராம மட்ட தலைவர்கள், உத்தியோகஸ்தர்கள் மற்றும் தொண்டர்களும் களத்தில் இருந்து உதவி செய்து வருகின்றனர்.

### நிவாரணப் பணிகள்

நிவாரணப் பணிகளுக்கு இலங்கையின் நாலாபக்கங்களில் இருந்து சுயேச்சையாகப் பொது மக்கள், சமய தலங்கள், வர்த்தக சங்கங்கள், கழகங்கள் மற்றும் தேசிய தனியார் ஊடக சேவைகள் முதன்மைப்படுத்தி வழங்கப்பட்டு வருகின்றது. அதை போன்று அரச, அரச சாரா நிறுவனங்களும் இந்தச் செயற்றிட்டத்தில் பாரிய ஒரு பங்கை வகுத்து வருகின்றது.

இவ்வனர்த்தத்தில் முழுமையாக தங்கள் வாழ்விடத்தை இழந்தவர்கள், பகுதியாக தங்கள் வாழ்விடத்தை இழந்தவர்கள் மற்றும் அனர்த்தத்தின் அவதானத்தில் இருந்து வாழ்விடங்களை கொண்ட மக்கள் கடந்த 02 வாரமாக முகாம்களில் தஞ்சமடைந்தார்கள். தற்போது அவதானமான இடங்களிலிருந்து முகாம்களில் தங்கியிருந்த மக்கள் படிப்படியாக தங்கள் வாழ்விடத்தை நோக்கி சென்று கொண்டு உள்ளார்கள். மீண்டும் மழை காலம் ஏற்பட்டால் மிக அவதானமான பகுதிகளில் வாழும் மக்களும், பூரணமாக தங்கள் வாழ்விடத்தின் மக்களும், பகுதியளவில் வாழ்விடத்தை இழந்த மக்களும் அனர்த்த முகாம்களில் பதிவாகி இருக்கின்றார்கள். அதை போன்று உறவினர் வீடுகளிலும் வசித்து வருகின்றார்கள்.

இந்த மக்களின் வாழ்வாதாரம் தேயிலை தோட்டங்களிலும், கூலி வேலைக்கு செல்பவர்களாகவும், நகர்ப்புறங்களில் வியாபார புறங்களில் வேலை செய்பவர்களாக பெரும்பாலானவர்கள் காணப்படுகின்றார்கள். இவர்களின் வாழ்வாதார வீழ்ச்சி என்பது மிக பாரிய பிரச்சினையாக உள்ளது. தேயிலை தோட்டங்களில் வேலை செய்ய இயலாத தன்மை, வியாபார தலங்களுக்கு செல்ல பாதை இல்லாத தன்மை காரணமாக நேரடியாக இவ்வனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுடன் பாதிக்கப்படாத மக்களும் தங்களுடைய அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடாத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. பெருந்தோட்டத்தை பொறுத்தவரையில் பெரும்பாலானவர் நாட்கூலிகளாக சென்று சிறு சேமிப்பை கைவசம் வைத்திருப்பவர்கள். அந்த சேமிப்பு தற்போது முடிந்த நிலையில் பாதிக்கப்படாத மக்களும் நிர்க்கதியாக நிற்கும் நிலையினை இந்த டித்வா புயல் ஏற்படுத்தியுள்ளது.


எனவே மனித அபிவிருத்தி தாபனம் தித்வா அனர்த்தத்தில் நேரடியாக, மறைமுகமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிராம மட்ட குழுக்களை உருவாக்கி மிக நேர்த்தியான முறையில் நேரடியாக பாதிக்கப்பட்ட, மறைமுகமாக பாதிக்கப்பட்ட சேவைகள் வழங்கி வருகின்றது.

### மீள் எழுதலுக்கான செயற்றிட்டம்

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்வுகள் மலையகத்தின் பெரும்பாலான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைய மக்களை மீள் குடியேற்றம் நிகழ்வுகள் படிப்படியாக நடைபெறும்.

மனித அபிவிருத்தி தாபனம் மற்றும் ஏனைய சிவில் அமைப்புகளும் தற்காலிகமாக இம்மக்கள் வாழ்வதற்கான வதிவிடங்களுக்கு உதவி செய்வதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றது. தற்போது இந்த அனர்த்தத்தில் நிர்க்கதியான பெரும்பாலான மக்கள் பாடசாலைகள், பாலர் பாடசாலைகள், தோட்ட கம்பனிக்கு சொந்தமான கட்டடங்கள், சமய தலங்கள், உறவினர்கள் வீடுகள் போன்றவற்றில் தற்காலிகமாக வசித்து வருகின்றார்கள்.

இவர்களுக்கான உளவியல் சுகாதார ஆலோசனைகள் வழங்குவதோடு பாடசாலை கல்வி நடவடிக்கைகளை மீள் ஆரம்பம் செய்ய வேண்டிய பட்சத்தில் தொழிற்சாலைகள் மீண்டும் உற்பத்தியை செய்யத் தொடங்கும் தருணத்தில் இந்த மக்களுக்கு வதிவிடங்கள் அவசியப்படும் என்பது கடந்தகால அனுபவங்கள் உணர்த்துகின்றது. யாரேனும் தற்காலிக வதிவிடங்கள் அமைத்து தருவதற்கு உதவும் பட்சத்தில் எம்முடன் இணைந்து இம்மீள் கட்டுமானத்தை உண்மையாக பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்க முடியும் என்பதை தெரிவித்து கொள்கின்றோம். - என்றார்.



# கோரதாண்டவம் ஆடிய டித்வா புயல்...!



எஸ். அனோஜா,
ஊடகக்கற்கைகள்துறை,
யாழ். பல்கலைகழகம்.

உலகளாவிய ரீதியில் இன்று அனைத்து நாடுகளும் எதிர்கொள்ளும் பாரிய சவால் காலநிலை மாற்றம் ஆகும். செயற்கை நுண்ணறிவு போன்ற புதிய தொழில்நுட்பம் மனித சமுதாயத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தினாலும் மனிதனால் தீர்வு காண முடியாத ஒரு சவாலாக காலநிலை மாற்றம் காணப்படுகின்றது. காலநிலையால் ஏற்படும் பாதிப்புகள் எம் மனித மனங்களில் அழியாத வடுக்களாகப் பதிந்து விடுகின்றன. இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல.

இயற்கையாக நிகழும் ஒரு நிகழ்வாக மனிதனுக்கு அவனுடைய சூழலுக்கு பாரிய பாதிப்பு ஏற்படுத்துவதுடன். பாதிக்கப்பட்ட அச்சமூகம் உடனடியாக இயல்பு நிலைக்கு மீள முடியாத ஒரு நிலைமையை இயற்கை அனர்த்தம் என பொதுவாக வரைவிலக்கணப்படுத்தலாம்.

உலக சுகாதார அமைப்பின் (WHO) இயற்கை அனர்த்த வரைவிலக்கணமானது, ஒரு இயற்கை நிகழ்வால் ஏற்படும் பாதிப்புகளால் சூழல், உயிர்கள், உடல்நலச் சேவைகள் மற்றும் சமூகக் கட்டமைப்பு ஆகியவை சீர்குலைக்கப்படும்போது, வெளி உதவிகள் தேவைப்படும் நிலை ஏற்படும்போது அதை அனர்த்தம் என்று குறிப்பிடுகிறது. அந்த வகையில் இலங்கையில் வரலாறு காணாத பாரிய பேரழிவு ஏற்படுத்திச் சென்ற டித்வா புயல் பற்றிய கண்ணோட்டமாக இந்த கட்டுரை அமைகின்றது.

Cyclone Ditwah 2025 இல் தென்மேற்கு வங்ககடலின் (southwest Bay of Bengal) ஒரு “well-marked low-pressure area” ஆக இருந்து உருவாகியது. அந்தப் பகுதியில் கடல் மேற்பரப்பின் வெப்பநிலை (sea-surface temperature) 28-30 °C வரை இருந்ததால், கடலில் இருந்த நீர் அதிக ஈரத்தன்மையுடன் இருந்தது, இது புயலுக்கான “எரிசக்தி (latent heat / moisture)” நிரப்பத்தை வழங்கியது. மேலும், அந்த நேரத்தில் காற்றின் மேல் மட்டம் மற்றும் கீழ் மட்டம் இடையேயான மீதமுள்ள வேக வேறுபாடு (vertical wind shear) 10-15 நாள்கள் போல் குறைவாக இருந்ததால், மேகங்கள் சீரான “cyclonic circulation + organised convection” முறைமையில் வளர முடிந்தது. அதைப் பொறுத்து, அந்த ஈரப்பதம், வெப்பம், குறைந்த wind-shear, மத்தியஆசிய வணிக காற்றுகளின் (monsoonal / convergence zone) ஈடுபாடு ஆகியவை இணைந்து டித்வா உருவாக்கத்தை ஏற்படுத்தியது.

டித்வா புயலின் தாக்கத்தால் தொடர் மழை காரணமாக வெள்ளப் பெருக்குகளாலும் நிலச்சரிவுகளாலும் இலங்கை பாரிய உயிர் சேதங்களுக்கும் உடைமை சேதங்களுக்கும் உட்பட்டது. இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 410 ஆக உயர்வடைந்துள்ளது. இன்னும் இந்த எண்ணிக்கை எந்த அளவுக்கு உயரும் எனத் தெரியவில்லை. 336 பேர் காணாமல் போயுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

25 மாவட்டங்களில் 309,607 குடும்பங்களைச் சேர்ந்த1,118,929பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

முகாமைத்துவ நிலையத்தின் அறிக்கையில்

தொடர்ச்சி ▼

# கோரதாண்டவம் ஆடிய டித்வா புயல்...!

தொடர்ச்சி▲

பாதிப்புகள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், பாதிப்புகளின் அளவு நொடிக்கு நொடி அதிகரித்து வருகின்றது. பல மாவட்டங்களில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக பதுளை, கண்டி, நுவரெலியா, மட்டக்களப்பு, பொலன்நறுவை , கொழும்பு, கேகாலை. மாத்தளை, கம்ஹா. வவுனியா, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் மண்சரிவுகளும் வெள்ளப் பெருக்குகளும் ஏற்பட்டு பாரிய சேதங்களை ஏற்படுத்தியுள்ளது.

நிலச்சரிவால் ரம்புக்எல விலானகம பகுதியில் அமைந்திருந்த முழு கிராமமே நிலத்தடியில் புதைந்து விட்டது. நாளாந்தம் கூலி வேலை செய்து வாழ்க்கையை நடத்திவந்த குடும்பங்கள் இன்று சொல்லில் அடங்காத வேதனைகளை எதிர்கொள்கின்றன. பச்சிளம் குழந்தைகளுக்குப் பால்மா உள்ளிட்ட அடிப்படை உணவுப் பொருள்களை வாங்கத் தேவையான பணமும் இல்லை. அத்தகைய பொருள்களைப் பெறக் கடைகளுக்குச் செல்லும் வழிகளும் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளன. இதுவரை குடும்பத்தை விட்டு வெளிநாடு அல்லது தூர இடங்களில் வேலை பார்த்து வந்த பலர், தங்கள் வீட்டார் எவ்வாறு உள்ளனர் என்பதை அறிய கூட தொலைபேசி அழைப்பை மேற்கொள்ள முடியாமல் தவித்து கண்ணீர் விட்டு வருந்திய நிலையும் உருவாகியது.

மனித வாழ்வின் பலவீனத்தையும், இயற்கை அனர்த்தத்தின் கொடூரத்தையும் வெளிப்படுத்தும் இந்த சம்பவங்கள், இலங்கை மண்ணில் அரங்கேறிய துயரமான உண்மைகளாக பதிந்துள்ளன.

சாலைகள் கீழிறங்குதல், பாலங்கள் இடிந்து நொருங்குதல், மண் சரிவுகள் காரணமாக முக்கிய பாதைகள் மூடுதல் மற்றும் குளங்கள் உடைந்து வெள்ளப்பெருக்கு ஏற்படல் போன்ற தொடர் இடர்பாடுகள் ஏற்பட்டன. ரயில் தண்டவாளங்களில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதுடன், சில பகுதிகளில் ரயில் தண்டவாளங்களுக்கு மேல் வெள்ள நீர் பெருக்கெடுத்து இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் விளைவாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் போக்குவரத்து முறையே சீர்குலைந்து, மக்கள் இடம்பெயர்வும் அவசர சேவைகளின் அணுகுதலும் கடுமையாக பாதிக்கப்பட்டது.

பல்வேறு பகுதிகளில் மின்சார தூண்கள் உடைந்து வீழ்ந்துள்ளமை, மின்சார தூண்களின் ஊடாக வெள்ள நீர் உட்பிரவேசித்துள்ளமை, மண்சரிவு காரணமாக மின்சார தூண்கள் உடைந்துள்ளமை உள்ளிட்ட காரணங்களால் மின்சாரம் தடைப்பட்டுள்ளது. லட்சம் ஏக்கர் பரப்பளவில் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கணக்கிட முடியாத அளவு கால்நடைகளை வெள்ளம் அடித்துச் சென்றுள்ளது.

தெற்காசியாவின் மிக முக்கியமான பல்கலைக்கழகமாகக் கருதப்படும் பேராதனை பல்கலைக் கழகம் வரலாறு காணாத அனர்த்தங்களை எதிர்நோக்கியுள்ளது. பல்கலைக் கழகத்தை அண்மித்து ஊடறுத்துச் செல்லும் மகாவலி கங்கையின் நீர்மட்டம் சடுதியாக அதிகரித்ததை அடுத்து, பேராதனை பல்கலைக் கழகத்திற்குள் வெள்ள நீர் பிரவேசித்துள்ளது.

இவ்வாறு நாடு பல இன்னல்களுக்கு முகங்கொடுக்கும் நேரத்தில் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அரசின் உத்தரவின் பேரில் படை, காவல், கடற்படை, வான்படை ஆகிய அனைத்தும் இணைந்து சிறப்பு மீட்புப் படையணிகளை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பின. வெள்ளநீர் சூழ்ந்த கிராமங்களில் சிக்கியிருந்த முதியோர், குழந்தைகள், நோயாளிகள் உள்ளிட்டவர்களை உடனடியாக மீட்கும் பணியில் இந்த அணிகள் ஈடுபட்டன. ஆபத்தான பகுதிகளில் இருந்து பொது மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல ரப்பர் படகுகள், உயர் சக்தி மீட்பு வாகனங்கள், மருத்துவ குழுக்கள் பயன்படுத்தப்பட்டன. இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸ் வெள்ளத்தில் சிக்கிய ஆயிரக்கணக்கானோரை மீட்கப் போராடினர். ஹெலிகொப்டர்கள் மற்றும் படகுகள் பயன்படுத்தப்பட்டு, கூரைகள் மற்றும் மரங்களில் சிக்கியவர்கள் மீட்கப்பட்டனர்.

அரசு அவசர கால சட்டத்தைப் பிறப்பித்தது. இது அவசர காலச் சட்டம். அரசு அதிகாரிகளுக்கு முக்கிய வளங்களை உடனடியாக ஒதுக்குதல், தற்காலிக முகாம்கள் நிர்வகித்தல், உணவு மற்றும் மருத்துவ உதவிகளை தடையின்றி விநியோகித்தல், அபாயப் பகுதிகளைவிட்டு உடனடியாக இடம் பெயர உத்தரவிடுதல் போன்ற சிறப்பு அதிகாரங்களையும் வழங்கியது.

இன மத பேதமின்றி அனைத்து சமூகத்தினரும் ஒன்றுபட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்தனர். தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆகிய பல சமூகப் பின்னணியிலிருந்து வந்த தன்னார்வலர்கள் இணைந்து உணவு, குடி தண்ணீர், உடை, மருந்து போன்ற அவசரப் பொருள்களை நேரடியாக மக்களிடம் கொண்டு சென்றனர். பல இடங்களில் மக்கள் தங்களின் வீடுகளில் புயலில் சிக்கிய அயலவர்களையும் அன்போடு தங்க வைத்து பாதுகாத்தனர்.

வெள்ளத்தில் சிக்கிய நாய்கள், பூனைகள், மாடுகள் மற்றும் பிற உயிரினங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து செல்லப்பட்டன. இந்த நடவடிக்கை, மனிதநேயமும் பராமரிப்பும் உயிரினங்களுக்கும் செலுத்தப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்தும் சிறந்த உதாரணமாக அமைந்தது.

டித்வா புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இலங்கைக்குப் பல சர்வதேச நாடுகளும், பன்னாட்டு அமைப்புகளும் விரைவாகத் தங்கள் ஆதரவுக் கரங்களை நீட்டின. இந்தப் பேரிடரைச் சமாளிக்க இலங்கை அரசு சர்வதேச உதவிகளை நாடியதைத் தொடர்ந்து, அண்டை நாடுகளும் நட்பு நாடுகளும் உடனடி மனிதாபிமான உதவிகளை (Humanitarian Assistance and Disaster Relief - HADR) வழங்கின.

இருப்பினும், இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ தகவல்களின் படி, 1957, 1978, 1989, 2003, 2004 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளில் உயிரிழப்புகள் அதிகமாக ஏற்பட்ட பல இயற்கை அனர்த்தங்கள் நிகழ்ந்துள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை வருடா வருடம் இயற்கை அனர்த்தங்கள் தொடர்ந்த வண்ணம் தான் இருக்கின்றன. இதை கருத்தில் கொண்டு, அரசு முன்கூட்டியே முறையாக செயல்பட்டிருந்தால், இத்தகைய பெரும் பேரிழப்புகள் நாட்டுக்குள் ஏற்பட்டிருக்காது. எனவே, இந்தப் பேரிடரால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கும் பொருளாதாரச் சேதங்களுக்கும் அரசே நேரடியாக பொறுப்பேற்க வேண்டும்.







# ஒல்லிக்குள மக்களுக்கு உதவிய பொற்கரங்கள்!

**(வி.ரி. சகாதேவராஜா)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் தொடர்ச்சியாக சமூக சேவகர் விசு. கணபதி பிள்ளையின் உதவும் பொற்கரங்கள் அமைப்பால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இன்று மண்முனை ஒல்லிக்குளம் கிராம 70 குடும்பங்களுக்கான நிவாரண பொதிகளும், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும். வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட உதவும் பொற்கரங்கள் அமைப்பின் இணைப்பாளர் குணராஜா கணபதிப்பிள்ளையின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் உதவும் பொற்கரங்கள் அமைப்பின் தாயக இணைப்பாளர் என். சௌவியதாசன், ஓய்வுபெற்ற உதவிக் கல்வி பணிப்பாளர் கண. வரதராஜன், சமூக சேவகர் திலகன், சமூக சேவகர் திருமதி சுரேஷ்குமார் சகாயநாயகி ஆகியோர் கலந்து கொண்டு நிவாரணப் பொதிகளை மக்களுக்குக் கையளித்தனர்.

இதற்கான நிதி உதவியை உதவும் பொற்கரங்கள் அமைப்பின் ஸ்தாபகரும் தலைவருமான விசு கணபதி பிள்ளையுடன் இணைந்து நியூசிலாந்தில் வசிக்கும் கனிஷ்ரராணி தம்பியப்பா ஆகியோர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. உதவும் பொற்கரங்கள் அமைப்பின் நிவாரண பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பணிகளுக்கான பூரண ஒத்துழைப்பை பெரியநீலாவணை நெக்ஸ் ரெப் இளைஞர்கள் வழங்கி வருகின்றனர்.

# திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தில் 60 லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணம்

**(எஸ்.கீதபொன்கலன்)**

இந்தியாவை தலைமை அலுவலகமாக கொண்ட மிட்வெஸ்ட் ஹெவி சான்ட்ஸ் சர்வதேச தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவாகத்தினர், டித்வா புயலால் பாதிக்கப்பட்ட திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 700 குடும்பங்களுக்கு 60 லட்சம் ரூபா பெறுமதியான நிவாரண உதவிப் பொருள்களை இன்று நேரடியாகச் சென்று வழங்கினர்.

குச்சவெளி பிரதேசத்தின் செந்தூர், புடவைக்கட்டுஆகியகிராமங்களில்பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதற்கட்டமாக இந்த நிவாரணப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஸ்வினி யஸ்வாத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன முதன்மை அதிதியாக கலந்து கொண்டு நிவாரணப் பொதிகளைப் பொது மக்களுக்கு வழங்கி வைத்தார்.

மேலும் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதான ஆலோசகர் ஏ.ஏ.ஏ. ருவைஸ், குச்சவெளி பிரதேச சபையின் பதில் தலைவர் வீ.எம்.றிஷாத், பிரதேச செயலாளர், அரச அதிகாரிகள் ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.

இதேவேளை, அடுத்த சில தினங்களில் இந்த நிறுவனம் முல்லைத்தீவுக்கு 9 மில்லியன் ரூபா பெறுமதியில் 1000 குடும்பங்களுக்கும், மன்னாருக்கு 4 மில்லியன் ரூபா பெறுமதியில் 400 குடும்பங்களுக்கும் நிவாரண பொருள்களை வழங்கவுள்ளனர் என்று நிறுவனத்தின் முதன்மை ஆலோசகர் தகவல் தெரிவித்தார்.











# விஜய்யை முதல்வராக ஏற்போருடன் கூட்டணி: த.வெ.க மாவட்ட செயலாளர் கூட்டத்தில் உறுதி

விஜய்யை முதல்வராக ஏற்றுக் கொண்டு அவர் தலைமையை விரும்பி வருவோரை தலைமையை விரும்பி ஏற்போரை கூட்டணிக்கு அரவணைப் போம் என்றும் கூட்டணி குறித்து முடிவு செய்யும் அதிகாரத்தை விஜய்க்கு வழங்கியும் த.வெ.க. மாவட்ட செய லாளர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் பனையூரில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று நடந்தது. பொதுச் செயலாளர் என். ஆனந்த் தலைமையில் நடைபெற்ற, இந்த கூட்டத்தில், நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் கே.ஏ.செங்கோட்டையன், தவெக இணை பொதுச் செயலாளர் சி.டி. ஆர்.நிர்மல் குமார், துணை பொதுச் செயலாளர் ராஜ்மோகன், தேர்தல் பிரச்சார மேலாண்மை பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா, கொள்கை பரப்பு பொதுச் செயலாளர் அருண்ராஜ், பொருளாளர் வெங்கட்ராமன், பரப்பு ரைச் செயலாளர் நாஞ்சி சம்பத், தேர் தல் வியூக வகுப்பாளர் ஜான் ஆரோக் கியசாமி உள்பட மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், வரும் சட்டப்பேரவை தேர்தல் பணிகள், கூட்டணி, வீடு வீடாக தவெகவினர் மக்களின் ஆத ரவு திரட்டுவது, பூத் கமிட்டி நிர்வா கிகளுக்கான பணிகள், விஜய்யின் அடுத்தடுத்த மக்கள் சந்திப்பு நிகழ்ச் சிகள் குறித்து விரிவாக ஆலோசிக் கப்பட்டது.

மேலும், ஒரு சில மாவட்ட செய லாளர்கள் கட்சி பணிகளை சரிவர செய்வதில்லை. கட்சி பணிகளை சரிவர செய்யாவிட்டால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்கள் மாற்றப்படுவார்கள் என தலைமை நிர்வாகிகள் கொடுத்தனர் கொடுத்த னர் என கூறப்படுகிறது.

மேலும், தேர்தல் வெற்றிக்கு மாவட்ட செயலாளர்களின் களப்பணி முக்கியமானது. அந்தவகையில், கட்சி பணிகளில் முழு வீச்சில் ஈடு படாத மாவட்ட செயலாளர்களை கட்சி தலைமை விரைவில் மாற்ற இருப்பதாக நிர்வாகிகள் தெரிவித்துள் ளனர். தொடர்ந்து, கே.ஏ.செங்கோட் டையன் தலைமையில் மாநில நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது.

இந்நிலையில், மாவட்ட செயலா ளர்கள் ஆலோசனை கூட்டத்தில், 'ஊழல் மலிந்த தி.மு.க. ஆட்சியை அகற்றி, புதியதோர் தமிழகத்தை சிறப்புற உருவாக்க வேண்டும். அதற் காக த.வெ.க. தலைவர் விஜய்யை முதல்வராக ஏற்றுக் கொண்டு, அவ ரின் தலைமையை விரும்பி வரு வோரை கூட்டணிக்கு அரவணைப் போம். மேலும் த.வெ.க. கூட்டணி குறித்த அனைத்து முடிவுகளையும் எடுக்க, விஜய்க்கு முழு அதிகாரம் வழங்கப்படுகிறது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# விஜய்யின் த.வெ.க. கட்சி மோதிரம் சின்னத்தில் போட்டி

நடிகர் விஜய்யின் தவெக கட்சி, மோதிரம் சின்னத்தில் போட்டியிட இருப்பதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.


தமிழக சட்டப்பேரவை தேர்தல் நெருங்கிவரும் சூழலில் முன்னேற் பாடுகளை த.வெ.க. கட்சி தீவிரப்ப டுத்தி வருகிறது.

தேர்தலில் போட்டியிடுவதற்கு பொதுவான சின்னம் வழங்கக் கோரி கடந்த மாதம் தேர்தல் ஆணையத்தில் த.வெ.க. மனு அளித்தது.

அதில் ஆட்டோ, கிரிக்கெட் மட்டை, விசில் உட்பட 10 சின்னங்கள் இடம்பெற்றிருந்தன. அதிலிருந்து ஒரு சின்னம் இறுதி செய்யப்பட்டுள் ளதாகவும், விரைவில் அறிவிப்பு வரலாம் எனவும் கூறப்படுகிறது.

அதன்படி த.வெ.கவின் சின்னம் 4 தமிழ் எழுத்துகளை கொண்டதாக இருக்கலாம் என்றும், அது மோதிர





மாக இருக்கக்கூடும் எனவும் தகவல் கள் கிடைத்துள்ளன.

இதுகுறித்து த.வெ.க. வட்டாரங் களில் விசாரித்தபோது,

"கட்சியின் சின்னம் பெண்களை எளிதில் ஈர்க்கும் விதமாக மக்களிடம் சுலபமாக கொண்டு சேர்க்கும்படி இருக்க வேண்டுமென விஜய் விரும் புகிறார்.

அந்தவகையில் மோதிரம் சின்னம் தனித்துவமான பிராண்டாக மாறும். சின்னம் குறித்த அறிவிப்புக்காக கட்சியின் தொண்டர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்." என்றனர்.



# இந்திய குடியரசுத் தலைவர் மணிப்பூரில் சுற்றுப் பயணம்

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு இரண்டு நாள் சுற்றுப் பயணமாக நேற்று மணிப்பூர் சென்றார். இம்பால் விமான நிலையம் சென்றடைந்த அவரை ஆளுநர் அஜய் குமார் பல்லா வரவேற்றார்.

இதையடுத்து அவர் லோக் பவனுக்கு புறப்பட்டார். 2022 ஜூலையில் குடியரசுத் தலைவராக முர்மு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு அவர் மணிப்பூருக்கு வருகை தருவது இதுவே முதல்முறை.

இந்த சுற்றுப்பயணத்தின்போது, மணிப்பூரின் பெண் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி, சேனாபதி மாவட்டத்துக்கு பயணம் செய்ய உள்ளார். அங்கு அவர் ஒரு பொதுக்கூட்டத்தில் உரையாற்ற உள்ளார். மணிப்பூரில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளையும் குடியரசுத் தலைவர் தொடங்கி வைக்க உள்ளார்.

மைதேயி மற்றும் குகி சமூகங்களுக்கு இடையே ஏற்பட்ட கடும் மோதல் காரணமாக இந்த ஆண்டு பெப்ரவரியில் மாநில அரசு கலைக்கப்பட்டு அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி அமுல்படுத்தப்பட்டது.

ஆயிரக்கணக்கான பாதுகாப்புப் படையினர் நிறுத்தப்பட்ட போதிலும் அவ்வப்போது வன்முறை சம்பவங்களின் நிகழ்வு வாடிக்கையாக உள்ளது.



# வெனிசுலா மீதான நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் டொனால்ட் ட்ரம்ப் அரசு

வெனிசுலா மீதான தனது நடவடிக்கைகளை ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

வெனிசுலா மற்றும் அந்நாட்டின் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவின் நிர்வாகத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக தற்போது வெனிசுலாவில் இருந்து எண்ணெயை கொண்டு செல்லும் கூடுதலாக 6 டேங்கர் கப்பல்கள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

வெனிசுலா கடற்கரையில் எண்ணெய் டேங்கர் கப்பல் ஒன்றை நேற்றைய தினம் அமெரிக்க இராணுவம் கையகப்படுத்தியதாக அறிவித்ததை தொடர்ந்து இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சமீபத்தில் கிடைத்த தகவல்கள்படி, அமெரிக்க படைகளால் கைப்பற்றப்பட்ட டேங்கர் கப்பலானது ஸ்கிப்பர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த கப்பல் சட்டவிரோதமாக எண்ணெய் ஏற்றுமதியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டி அமெரிக்க அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அமெரிக்காவின் பொருளாதார தடைகள் எண்ணெய் கப்பல்கள் மீது மட்டும் இல்லாமல் ஜனாதிபதி மதுரோவின் உறவினர்கள் மீதும் அவர்களின் வணிகங்கள் மீது பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.





# ரஷ்யா நடத்தும் போரைத் தடுப்பதற்கு பாதுகாப்பு முயற்சிகளை மேற்கொள்க

## நேட்டோ தலைவர் உறுப்பு நாடுகளுக்கு வலியுறுத்தல்

ரஷ்யா நடத்தும் போரைத் தடுக்க பாதுகாப்பு முயற்சிகளை முடுக்கி விடுமாறு நேட்டோ தலைவர் மார்க் ரூட் நேட்டோ உறுப்பு நாடுகளை வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்யாவின் போரானது நம் தாத்தா பாட்டி மற்றும் கொள்ளு தாத்தா பாட்டி ஆகியோர் எதிர் கொண்ட போரின் அளவாக இருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெர்லினில் உரையாற்றிய அவர், ஐரோப்பாவில் ரஷ்யாவின் அச்சுறுத்தலின் அவசரத்தை நேட்டோ உறுப்பு நாடுகள் பல உணரவில்லை என்றும், கடந்த தலைமுறையினர் கண்ட அளவிலான போரைத் தடுக்க பாதுகாப்புச் செலவுகளையும் உற்பத்தியையும் விரைவாக அதிகரிக்க வேண்டும் என்றும் ரூட் அறிவுறுத்தியுள்ளார்.

ரஷ்யாவின் அடுத்த இலக்கு நாம் தான். அதிகமானோர் அமைதியாக மெத்தனமாக இருப்பதாக நான் அஞ்சுகிறேன். அதிகமானோர் அவசரத்தை உணரவில்லை.

மேலும் அதிகமானோர் காலம் நம் பக்கம் இருப்பதாக நம்புகிறார்கள். அது இல்லை. நடவடிக்கைக்கான நேரம் இது என்றும் ரூட் வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.

மேலும், போர் நம் வாசலில் உள்ளது. ரஷ்யா ஐரோப்பாவில் மீண்டும் போரை கொண்டு வந்துள்ளது. நாம் தயாராக இருக்க வேண்டும். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் ரஷ்யா இந்தக் கூட்டணியை நேரடி மோதலில் ஈடுபடுத்தக்கூடும் என்றும் ரூட் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் மரியா ஜகாரோவா, உக்ரைனில் உள்ள எந்தவொரு ஐரோப்பிய படைவீரரும் சட்டபூர்வமான இலக்குகளாகக் கருதப்படுவார்கள் என்றார்.

இந்த நிலையில், ரஷ்யாவிற்கு எதிரான போரின் யதார்த்தம் அதிகரித்து வருவதால், நமது குழந்தைகளை இழக்க நாடு தயாராக இருக்க வேண்டும் என்று பிரான்சின் உயர் தளபதி சமீபத்தில் எச்சரிக்கை விடுத்தார்.

மேலும், அமெரிக்காவில் இருந்து ஐரோப்பாவை கடுமையாக விமர்சிக்கும் நிலை உருவானதை அடுத்தே ரூட் ரஷ்யா தொடர்பில் தமது கருத்தை முன்வைத்துள்ளார்.

# உலகம் முழுவதும் பரவிவரும் சூப்பர் ப்ளு வைரஸ் தொற்று

உலகம் முழுவதும் சூப்பர் ப்ளு என அழைக்கப்படும் வைரஸ் தொற்று ஒன்று பரவிவருகிறது.

அது கொள்ளை நோயாக உருவெடுக்கும் திறன் கொண்டது என கருதப்படும் நிலையில், அந்த வைரஸ் தொற்று தொடர்பில் உலக சுகாதார அமைப்பு அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலக நாடுகள் பலவற்றில், Super flu என அழைக்கப்படும் ப்ளு காய்ச்சல் பரவிவருகிறது.

Influenza A (H3N2) என்னும் வைரஸால் பரவும் இந்த தொற்று, பூமத்திய ரேகைக்கு வடக்கே உள்ள சில நாடுகளில் வழக்கத்தைவிட சீக்கிரமாகவே துவங்கியுள்ளது. சில நாடுகளில் தொடர்ந்து அதிகரித்துவருகிறது.

அதே நேரத்தில், பூமத்திய ரேகைக்கு தெற்கே உள்ள சில நாடுகளில் வழக்கத்தைவிட அதிக நாட்களுக்கு ப்ளு தொற்று நீடிக்கிறது.

ஆக மொத்தத்தில் இது வழக்கமான ப்ளு தொற்றாக இல்லாமல், சற்றே மாற்றமடைந்த தொற்றாக



உள்ளது. அறிவியல் ரீதியாக கூறினால், மரபணு மாற்ற ப்ளு வைரஸ் ஒன்று இந்த தொற்றை உருவாக்குகிறது.

இந்த ப்ளு தொற்றை உருவாக்கும் வைரஸ், கொள்ளைநோயாக மாறும் திறன் கொண்டது என எச்சரித்துள்ள உலக சுகாதார அமைப்பு, வைரஸ் மாறினாலும், ஏற்கனவே பயன்பாட்டில் இருக்கும் தடுப்பூசிகளை போட்டுக்கொள்வது அத்தியாவசியம் என்றும் கூறியுள்ளது

கனடா முரசு
வெள்ளிக்கிழமை | 12/12/2025

**பெண் வைத்தியர்களிடம் அத்துமீறல் இந்தியர் வம்சாவளி இளைஞர் கைது**

கனடாவில் பெண் வைத்தியர்கள் உள்பட பெண் மருத்துவ ஊழியர்களிடம் அநாகரிகமாக நடந்து கொண்ட இந்திய வம்சாவளி நபரை பொலிஸார் கைது செய்தனர். இது தொடர்பாக 02



# உலகின் முன்னணி ஆராய்ச்சியாளர்களை ஈர்க்க 1.2 பில்லியன் டொலர் முதலீடு செய்யும் கனடா

கனடா, உலகின் முன்னணி ஆராய்ச்சியாளர்களை ஈர்க்க 1.2 பில்லியன் டொலர் முதலீடு செய்யவுள்ளது.

கனடா அரசு, உலகின் சிறந்த ஆராய்ச்சியாளர்களை தனது பல்கலைக்கழகங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு அழைத்து வர 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் 1.7 பில்லியன் கனடிய டொலர்) முதலீடு செய்யும் மிகப்பெரிய திட்டத்தை அறிவித்துள்ளது.

Canada Global Impact+ Research Talent Initiative எனப்படும் இந்த திட்டத்தின் மூலம், 1,000-க்கும் மேற்பட்ட சர்வதேச மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களை கனடாவிற்கு அழைத்து வர முடிவு செய்துள்ளது.

இந்த திட்டத்தில் நான்கு முக்கிய கூறுகள் உள்ளன: 02

# டொரொன்டோவில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் மரணம்

டொரொன்டோவின் சார்பரோகில் இடம்பெற்ற விபத்தில் 70 வயது பெண் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் ஹோம்ஸ்டேட் வீதி மற்றும் கொரோனேசன் வீதி என்பன வற்றுக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

நடந்து சென்ற பெண்ணை வாகனம் மோதியதாக தகவல் கிடைத்ததும், பொலிஸ் மற்றும் அவசர மருத்துவ குழுக்கள் இடத்துக்கு விரைந்துள்ளனர்.

மருத்துவ உதவியாளர்கள் பெண்ணை மதிப்பீடு செய்தபின், உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் மருத்துவமனைக்கு அனுப்பினர். பின்னர் மருத்துவர்கள் அவர் உயிரிழந்துள்ளார் என அறிவித்தனர்.

வாகனம் சாரதி இடத்தை விட்டு தப்பிச் செல்லாமல் அங்கிருந்தார்




மற்றும் விசாரணைக்கு ஒத்துழைக்கிறார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

“சம்பவம் எப்படித் நிகழ்ந்தது என்பதை அறிய பலரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.

அருகிலுள்ள வணிக வளாகங்களின் சி.சி.ரி.வி. காட்சிகள் இருந்தால் உடனடியாக பொலிஸாருக்கு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

தகவல் உள்ளவர்கள் பொலிஸை தொடர்பு கொள்ளலாம். சம்பவம் குறித்து தகவல் கொண்டவர்கள் டொரொன்டோ பொலிஸை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.




# கனடா தபால் சேவையை பயன்படுத்தி சர்வதேச போதைப்பொருள் கடத்தல்

கனடா தபால் சேவையை பயன் படுத்தி சர்வதேச அளவில் போதைப் பொருள் கடத்தல் செய்ததாக ஒட்டா வாவைச் சேர்ந்த நால்வருக்கு குற்றச் சாட்டு பதிவு செய்துள்ளது.

கனடாவின் பொலிஸார் சுமார் 10 மாதங்கள் நீண்ட விசாரணைக்குப் பின்னர் இந்த தகவல்களை வெளியிட் டுள்ளனர்.

பல நாடுகளுக்கு போதைப்பொருள் அனுப்பிய கும்பல் குற்றச்சாட்டுக்குள் ளானவர்கள் மெத்தாம்பெட்டமின்கள், கொகெயின் உள்ளிட்ட போதைப் பொருட்களை கனடா முழுவதும் மட்டுமல்லாமல் பல நாடுகளுக்கு விநியோகம் செய்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜெர்மனி, ஸ்வீடன், பிரான்ஸ், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, ஐக்கிய இராச்சியம், ஸ்லோவாக்கியா, ஆஸ்திரியா, இந் தியா, அயர்லாந்து உள்ளிட்ட ஒரு பல நாடுகளுக்கு தபால் மூலம் போதைப் பொருள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

பொலிஸாரின் சோதனையின் மூலம்1.2கிலோமெத்தாம்பெட்டமைன், 200 ஹைட்ரோமோர்போன் மாத்தி ரைகள், கொகெயின் மற்றும் பிற போதைப்பொருள்கள் மீட்கப்பட் டுள்ளன.சுமார் 166000 டொலர்கள் பெறுமதியான போதைப் பொருட்கள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பீல் பிராந்திய பொலிஸார் தெரிவிக் கையில்,

உடல்நிலை சரியில்லை எனப் பொய்யாக கூறி, வைபவ் என்ற நபர், பெண் வைத்தியர்கள் பணியாற்றும் மருத்துவமனைக்கு சென்று, வைத்தி யர்களிடமும், பெண் மருத்துவ ஊழியர் களிடம் அநாகரிகமாக நடந்து கொண்டுள்ளார்.

பல மாதங்களாக இதே வேலையை செய்து வந்துள்ளார். இது தொடர்பாக புகார் அளித்த பெண் மருத்துவ ஊழியர் கள், தங்கள் முன்பு ஆபாசமாக நடந்து கொண்டார் எனவும் போலியான பெயர் மற்றும் அடையாளத்துடன் தங்களை அணுகினார் என்றும் கூறியுள்ளனர்.

கடந்த டிசம்பர் 4 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ள வைபவ் தற்போது



விசாரணைக்காக பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொது இடத்தில் ஆபாசமாக நடந்து கொள்ளுதல், லாப நோக்கத்துடன் போலி அடையாளத்தை பயன்படுத் தியது, ஆவண திருட்டு உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப் பட உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

## உலகின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

Impact+ Research Chairs: 12 ஆண்டுகளில் 1 பில்லியன் டொலர் செலவில், 100 உலகத் தரம் வாய்ந்த ஆராய்ச்சியா ளர்கள் மற்றும் அவர்களின் குழுக்களை கனடாவுக்கு அழைத்து வருதல்.

Emerging Leaders Program: 120 மில்லியன் டொலர் செலவில், இளம் ஆராய்ச்சியா ளர்களை ஊக்குவித்தல்.

Research Infrastructure Fund: 400 மில்லி யன் டொலர் செலவில், புதிய ஆராய்ச்சி உபகரணங்கள் மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல்.

Research Training Awards: 133.6 மில்லியன் டொலர் செலவில், 600 முனைவர் பட்ட மாணவர்கள் மற்றும் 400 பிந்தைய ஆராய்ச்சியாளர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்.

அமெரிக்காவில் அறிவியல் ஆராய்ச் சிக்கு ஆதரவு குறைந்து வரும் சூழ் நிலையை பயன்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன் கனடா இத்திட்டத்தை வடிவமைத்துள்ளது.

கனடாவின் தொழில்துறை அமைச் சர் மெலானி ஜோலி, “மற்ற நாடுகள் கல்வி சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் நிலையில், கனடா அறிவியலுக்கு முதலீடு செய்கிறது. உலகின் சிறந்த அறிவாளிகளை ஈர்த்து, ஜி 7 நாடுகளில் முன்னணி அறிவியல் சக்தியாக மாறு வதே எங்கள் இலக்கு” என தெரிவித் துள்ளார்.

மேலும், அமெரிக்காவில் எச்-1பி விசா கட்டண உயர்வால் பாதிக்கப்பட்ட ஆராய்ச்சியாளர்களுக்கு, கனடா விரைவான குடியுரிமை பாதையை வழங்கும் திட்டத்தையும் அறிவித் துள்ளது.

இந்த நடவடிக்கை, கனடாவை உலக அறிவியல் மற்றும் புதுமை மையமாக மாற்றும் முக்கிய முயற் சியாகக் கருதப்படுகிறது.




# சகோதரனை கொலை செய்ய முயற்சி; 12 வயது சிறுவன் மீது குற்றச்சாட்டு

கனடாவின் லெத்த்பிரிட்ஜில் தன் 7 வயது தம்பியை குத்தி கொலை செய்ய முயன்றார் என குற்றம் சாட்டப்பட்ட 12 வயது சிறுவன் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

இளையோர் சட்டத்தின் கீழ் சிறுவனின் அடையாளம் வெளியிடப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் எட்மன்டன் மருத்துவமனையில் இருந்து வீடியோ காணொளி மூலம் லெத்த்பிரிட்ஜ் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

அவரது வழக்கறிஞர், கொலை முயற்சி குற்றச்சாட்டுக்கு அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார் என தெரிவித்தார்.

ஒகஸ்ட் 27 அன்று இரு சகோதரர்களும் வீட்டில் தந்தை கடைக்குச் சென்றிருந்ததால் தனியாக இருந்தனர்.

அந்த நேரத்தில் 12 வயது சிறுவன் கோபமடைந்து, தம்பிக்கு தீங்கு செய்ய வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

7 வயது தம்பி பயந்து ஒரு அறைக்குள் ஓடி, போர்வைக்குள் மறைந்துள்ளான் பின்னர் மூத்த சகோதரன் சமையலறையில் இருந்து கத்தியை எடுத்துக் கொண்டு, அறைக்குள் சென்று தன் தம்பியை ஒன்பது முறை குத்தியுள்ளார்.

இந்த தாக்குதலில் சிறுவன் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என தெரிவிக்கப்படுகின்றது. நீதிபதி இந்த வழக்கை பெப்ரவரி மாதம் வரை ஒத்திவைத்துள்ளார்.

